**MCOP.5/2023- PW1 .**

**திரு.கௌதம், த/பெ.மஞ்சுநாத்**

**நாள்:21.08.2025.**

**குறுக்கு விசாரணை 2 வது எதிர் மனுதாரர் தரப்பில் :**

நான் ஓட்டி சென்ற டிவிஎஸ் அப்பாச்சி **TN 70 Q 3708** இருசக்கரவாகனம் யாருடையது என்றால் என் மச்சான் வண்டியாகும் அவரது பெயர் சீனிவாசன். எனக்கு இருசக்கரவாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் இருக்கிறது. ஓட்டுநர் உரிமத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை விபத்தின் போது தொலைந்துவிட்டது. நான் எந்த வட்டரா போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்தேன் என்றால் மத்திகிரி **RTO** அலுவலகத்தில் எடுத்தேன். விபத்தின் போது எனக்கு ஓட்நர் உ ரிமம் இருந்தாகவும் அது விபத்தில் தொலைந்துவிட்டது என்று எனது மனுவிலும் முதுல் விசாரணை யிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த தேதி **03.12.2020** என்றால் சரிதான். இந்த **5** வருடத்தில் தொலைந்து போன ஓட்டுநர் உரிமத்திற்கு நகல் எடுத்து தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.எனக்கு ஓட்நர் உரிமமே இல்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு பாலிசி இல்லை என்றால் இருக்கிறது. நான் ஓட்டி சென்ற வாகனத்தின் உரிமையாளரையும், அந்த வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தையும் இந்த வழக்கில் நான் தரப்பினராகசேர்கவில்லை என்றால் சரிதான். விபத்தின் போது நான் உத்தனப்பள்ளியில் இருந்து கெலமங்கலம் நோக்கி சென்று கொண்டிருந்தேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் உத்தனப்பள்ளியில் இருந்து கெலமங்கலம் செல்லும் ரோட்டில் ஓபேபாளையம் பிரிவில் நடந்தது என்றால் சரிதான். கார் ஆனது கெலமங்கலத்தில் இருந்து உத்தனப்பள்ளி நோக்கி வந்தது என்றால் சரியல்ல. அந்த கார் ஆனது எனக்கு பின்னால் வந்தது. நான் ஓட்டி சென்ற வாகனத்தை மோட்டார் ஆய்வு அறிக்கைக்கு உட்படுத்தப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன

ஆய்வு அறிக்கையில் அந்த இருசக்கர வாகனத்திற்கு முன் பக்கம் தான் சேதாரம் என்று குறிப்பிட்டு இருப்பதால் கார் ஆனது எனது வாகனத்தின் பின் பக்கம் வந்து மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதே போல் அந்த காரின் மோட்டா வாகன ஆய்வு அறிக்கையிலும் அந்த காரின் பின் வலது பக்கம் உள்ள சக்கரத்தின் மர்காடு பகுதியில் தான் சேதாரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த கார் ஆனது எனது வாகனத்தை முந்தி செல்ல முயன்ற போது எனது வாகனத்தின் மீது டச் செய்துவிட்டது. ஓபே பாயைம் பிரிவு ரோட்டில் ரோடு திரும்பும் இடத்தில் விபத்து நடந்ததாக போலீசார் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது சரிதானா என்றால் சரிதான். அந்த குற்றஎண்.395/2020 ல் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் உத்தனப்பள்ளியில் இருந்து கெலமங்கலம் செல்லும் ரோட்டில் ஓபேபாளையிம் பிரிவில் திடீரென இடதுப்பக்கதில் இருந்து வலது பக்கம் சென்றதால் தான் இந்த விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்தானது உத்தனப்பள்ளியில் இருந்து கெலமங்கலம் செல்லும் ரோட்டின் வலது புற ஓரத்தில் விபத்து நடந்திருப்பதால் விபத்திற்கு நான் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது நான் தலைகவசம் அணிவில்லை என்றால் சரியல்ல. நான் தலைகவசம் அணிந்திருந்ததாக மனுவிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பி.காம் படித்திருக்கிறேன். ஆடிட்டர் அலுவலகத்தில் வேலை செய்கிறேன். நான் ஆடிட்டர் அலுவலகத்தில் வேலை பார்ப்பதற்கும் மாதம் ரூ.15000 வருமானம் வருவதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பி.காம் படித்துள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் கேட்கவில்லை அதனால் கொடுக்கவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.5 ல் உள்ள வரிசை எண்1 மற்றும் 19 இரண்டும் ஒன்று தான் என்றால் சரிதான். ம.த.சா.ஆ.5 ல் உள்ள வரிசை எண் 8 ல் ரூ.7094/- எதற்காக வழங்கப்பட்டது என்ற குறிப்பு அதில் இல்லை என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.5 ல் உள்ள வரிசைகளில் சில பில்களில் மருத்துவமனை சீலோ, கையெழுத்தோ மற்றும் நான் அதை செலுத்தினேன் என்பதற்கு ஆதாரமோ அதில் இல்லை என்றால் சரியல்ல.

ம.த.சா.ஆ.10 ல் வரிசை எண்.1 ல் ரூ.35,000 செலுத்தியதாக உள்ளது என்றும் அதில் உள்ள கடைசி பக்கத்தில் Total லில் அது ரூ.65,000/- ஆக காட்டப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் ரூ.30,000 முன் பணம் செலுத்தியதாக சொல்வதற்கு இரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 18.06.2024 ம் தேதியில் ரூ.40,000 செலுத்தியதாக ஒரு பில் போட்டிருக்கிறேன் என்றால் சரிதான். அதில் நான் ரூ.10,000 செலுத்தியதாக உள்ளது என்றால் சரிதான். அதில் நான் ரூ.30,000 அட்வான்ஸ் செலுத்தியதாக உள்ளது என்றும் நான் ரூ.40,000 பில் இல்லாமல் அட்வான்ஸ் ரூ.30,000 பில்லையும் தனியாக காட்டியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.த.சா.ஆ.10 ல் ரூ.1,53,306 ல் ரூ.60,000 ஐ கழித்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவ பில்களில் மருத்துவமனை சீலோ கையெழுத்தோ இல்லததால் சம்மந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரியை விசாரித்து தான் நான் நிருபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் வேலை இல்லை. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயம் சரியாகிவிட்டது என்றும் எனக்கு வருமான இழப்போ, நிறந்தர ஊனமோ, செயல் திறன் குறைபாடோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவால் ஏற்பட்டதால் நீதிமன்றம் இறுதிஉத்தரவில் கழித்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**